**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 101 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 8** |
| **Name** | : | **திரு. செந்தில்குமார்** |
| **Father's Name** | : | பாலு |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.02.2022**

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கு சமயத்தில் மகாத்மாகாந்தி தெரு, பழைய மீனாட்சி நகர், புது ராம்நாடு ரோட்டில் குடியிருந்து வந்தேன். எனக்கு கொடுத்த நீதிமன்ற அழைப்பாணையில் எனது பெயர் செல்வக்குமார் என்று தவறாக எழுதப்பட்டுள்ளது. ஆஜர் எதிரியைத் தெரியும். நாங்கள் கீழ் வீட்டில் குடியிருந்தோம். எதிரி மாடி வீட்டில் குடியிருந்தார். எதிரி, அவரது அம்மா, அப்பா, மற்றும் எதிரியின் மனைவி மற்றும் ஒரு சிறு குழந்தை ஆகியோர் குடியிருந்தார்கள். சுமார் 5 வருடக்கு முன்பு குடியிருந்தார்கள். 2016ம் ஆண்டு மாட்டுப்பொங்கலுக்கு மறுநாள் நான் வேலை முடித்து மதிய நேரம் வீட்டிற்கு வந்தேன். வீட்டின் வாசலில் கூட்டமாக இருந்தது. எனது மனைவி என்னிடம், மாடியில் குடியிருந்த பெண்ணிற்கு தலையில் அடிபட்டுவிட்டது என்றும் அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளதாகவும் சொன்னார். அந்த பெண் எதிரியின் மனைவி ஆவார். நானும் எனது மனைவியும் பெரியாஸ்பத்திரிக்கு போய் எதிரியின் மனைவியை பார்த்தோம். நான் வேலைக்கு சென்றிருந்தேன். எப்படி அடிபட்டது என்று எனக்குத் தெரியாது. என் மனைவி தான் ஆட்டோ பிடித்து எதிரியின் மனைவியை ஆஸ்பத்திரிக்கு

அனுப்பிவைத்ததாக என் மனைவி சொன்னார். அப்போது எதிரியின் தகப்பனாரும் வந்ததாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 101 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 9** |
| **Name** | : | திருமதி.ஜெயசுதா |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.02.2022**

<u>முதல் விசாரணை :</u>

நான் இந்த வழக்கு சமயத்தில் மகாத்மாகாந்தி தெரு, பழைய மீனாட்சி நகர், புது ராம்நாடு ரோட்டில் குடியிருந்து வந்தேன். அசா8 எனது கணவர். நான் தற்போது ராஜுவ் காந்தி நகரில் குடியிருக்கிறேன். மீனாட்சிநகரில் இதற்கு முன்பு நான் குடியிருந்த போது, ஆஜர் எதிரி அவரது மனைவி, குழந்தை மற்றும் தாய், தகப்பனாருடன் மாடியில் குடியிருந்தார். நாங்கள் கீழ் தளத்தில் குடியிருந்தார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு பொங்கலுக்கு மறுநாள் எதிரியின் அம்மா யாராவது வாங்க என்று சத்தம் போட்டார். நான் பாதி படி ஏறி சென்ற போது, தனது மருமகளுக்கு அடிபட்டதாக சொன்னார். எப்படி என்று கேட்டதற்கு மாடிப்படி ஏறும்போது அடிபட்டதாக சொன்னார்கள். ஆட்டோ கூட்டி வரும்படி சொன்னதால் நான் ஆட்டோ கூட்டிவந்தேன். அதன் பின் எனது கணவர் வந்தார். நானும் எனது கணவரும் மருத்துவமனை சென்று பார்த்தோம். அவருக்கு தலையில் தையல் போட்டுக்கொண்டு இருந்தார்கள். அங்கு அந்த பெண்ணின் அம்மா, அப்பா அழுதுகொண்டு இருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்த போதும் இதைத்தான் சொன்னேன். அதன் பின் 2 நாட்கள் கழித்து கலெக்டர் ஆபிசிலும்

என்னை விசாரித்தார்கள். அவரிடமும் இதயே தான் சொன்னேன்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

<u>அரசு தரப்பில் கு.வி.</u>

போலிஸ் விசாரணையின் போது, கடந்த 16.01.2016 ம் தேதி நானும் எனது கணவரும் சாப்பிட்டுக்கொண்டு இருந்தபோது, மேல் வீட்டில் குடியிருந்த பெண் ரோசி சுத்தியலால் என்னை அடிக்காதீங்க அடிக்காதீங்க என்று கத்தினார் என்றும் அதைக்கேட்டு நானும் எனது கணவரும் மாடிப்படி ஏறும்போதே எதிரி அவரது கையில் இரத்தக் கரையுடன் இறங்கினார் என்றால் சரியல்ல. நான் என்ன என்று கேட்டதற்கு எதிரி தனது மனைவியை அடித்துவிட்டு போவதாக சொன்னதாக சொன்னால் சரியல்ல. நான் வீட்டிற்கு உள்ளே சென்று பாத்ரூம் பக்கத்தில் எதிரியின் மனைவி ரோசி இரத்த வெள்ளத்தில் மயங்கிக்கிடந்தார் என்றும், மாத்திரை போட்டு தூங்கிக்கொண்டிருந்த ரோசியின் மாமியாரை நான் எழுப்பினேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதன் பிறகு தான் நானும் எனது கணவரும் ஆட்டோ பிடித்து, ரோசியை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றும், அப்போது தான் எதிரியின் தகப்பனார் வந்தார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி தனது மனைவியை சந்தேகப்பட்டு அடிக்கடி சண்டை போடுவார் என்றும் அவ்வாறு தான் அன்றைய தினமும் இருந்துவிட்டோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எதிரிக்கு சாதகமாக சாட்சி சொல்லவேண்டும் என்பதற்காக போலிஸ் விசாரணையில் சொன்னதற்கு விரோதமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை